"இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே"

# கிறிஸ்தவ மாநாடு - 2011



## கிறிஸ்தவ மன்றம்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா

24.09.2011

“இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே”

கிறிஸ்தவ மாநாடு – 2011



**-24.09.2011-**

**கிறிஸ்தவமன்றம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி வவுனியா.**

# சஞ்சிகை விபர அட்டவணை


| | | |
|---|---|---|
| சஞ்சிகை | - | கிறிஸ்தவ மாநாட்டு மலர் |
| வெளியீடு | - | கிறிஸ்தவ மாநாட்டு மலர்க்குழு - 2011<br>வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி |
| பதிப்பு ஆண்டு | - | 2011 |
| பக்க அளவு | - | A5 |
| பக்கம் | - | 36 |
| பிரதிகள் | - | 300 |
| வழிகாட்டலும் | - | திரு.க.பேர்ணாட், பீடாதிபதி |
| ஆலோசனையும் | | வண, M.A யேசுராஜன் (ஜோன்சன்) அ.ம.தி |
| மலர்க்குழு | - | திரு.மி.சூசைதாசன் - காப்பாளர், கிறிஸ்தவமன்றம்<br>திருமதி. நெ.அன்ரனிகுரூஸ், திரு.S.பற்றிக் ஜெராட் -<br>ஆலோசகர்கள் கிறிஸ்தவமன்றம்<br>செல்வன்.S.மோகன்ராஜ்<br>செல்வன்.J. டைசன்<br>அருட்சகோதரி பிரியதர்ஷினி குரூஸ்<br>அருட்சகோதரி பிரபாஜினி பிரான்சிஸ் |


மனிதம் சார் சமூக அசைவியக்கத்தில் சரியான புரிதல்களின் வழிப்படுத்தலுக்கு இந்நிகழ்வு இன்னுமோர் மகுடம் கருத்தியல்களை மாற்றியமைக்கும் அணுகு முறைக்கு இதுவுமோர் அடையாளம் முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைத்துள்ளங்களுக்கும் பாராட்டுகளும் வாழ்த்துக்களும்.

திரு.சு.பரமானந்தம்
ஆசிரிய கல்வியியலாளர்



## மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச்செய்தி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் முன்னெடுக்கும் பல நல்ல முயற்சிகளையும் வளர்ச்சியையும் எண்ணி மகிழ்வடைகின்றேன். எமது மன்னார் மறைமாவட்ட தலத்திருச்சபை வருடாவருடம் நடைமுறைப்படுத்தும் மேய்ப்புப் பணிக்கருப்பொருளின் அடிப்படையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் கிறிஸ்தவ மாநாடு ஒன்றை ஒழுங்கு செய்து கிரமமாக நடாத்தி வருகிறது. அந்த வகையில் எமது மறைமாவட்டத்தில் இவ்வாண்டு "கிறிஸ்துவின் சாட்சியாய் விழித்தெழு" என இளையோருக்கு அழைப்பு விடுக்கும் "இளைஞர் ஆண்டாக" கடைப்பிடிக்கப்படுகின்ற வேளையிலே "இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே" என மையப்பொருளமைத்து நடாத்துகின்ற கிறிஸ்தவ மகாநாடு 2011 நிகழ்வினையும், இதனை முன்னெடுக்கின்ற கிறிஸ்தவ மன்றத்தையும் பெரிதும் பாராட்டி நிற்கின்றேன்.

வாழ்க்கைப் பயணத்திலே இளமைப்பருவம் என்பது ஒரு நிலையத்திற்கும் அடுத்த நிலையத்துக்குமான இனியதொரு பயணம் உண்மையில் இந்தப் பயணமே அடுத்து தொடரப்போகும் ஆரோக்கியமான, அர்த்தம் நிறைந்த பயணத்திற்கான அடித்தளமாக அமைகிறது. "எந்தக்காலத்திலும் எந்த நேரத்திலும் இயங்குவது இளமை" என்கிறபடியினால் மாண்புறு சமூகம் படைக்கின்ற உயிர்த்துடிப்பை இளையோரே கொண்டிருக்கின்றனர். சமகாலத்தில் பல மனிதர்கள் சமூகப்பார்வை மங்கியவர்களாய் வாழ்ந்து வருவதைக் காண முடிகிறது. சுயநலச் சுவர்களுக்குள்ளே பலர் முடங்கியுள்ளனர். போரின் விளைவும், ஏமாற்ற உணர்வும் தீர்வில்லா நிலையும் உலகமயப் போக்கும் "தானும் தன் குடும்பமும்" என்னும் குறுகிய மனநிலைகளை வெகுவாக எம்மக்களிடையே விதைத்து வருகின்றன. இந்நிலையில் மாண்புறு சமூகம் காணும் மகத்தான பணி இளைஞர்கள் கைகளிலேயே தங்கியிருக்கின்றது. உலக வரலாற்றில் பல நல்ல சமூக மாற்றங்கள் இளைய

உள்ளங்களாலேயே ஏற்படுத்தப்பட்டன. சுயநலமின்றி பொது நலனையே கருவியாகக் கொண்டு தொண்டாற்றும் இளைஞர்களே வாழ்வில் வெற்றி பெற முடியும். அதுவே மனித நேயத்தை, மாநுட தர்மத்தை வளர்க்கும், நிலைநிறுத்தும்.

இயேசுவின் முழுமனித விடுதலைப்பணி இளைஞர் என்ற புள்ளியில் இருந்துதான் தொடங்கியிருந்தது. "இளைஞனே நான் உனக்குச் சொல்கிறேன் எழுந்திடு" (லூக். 7:14) என்ற இயேசுவின் குரல் ஒலியைக் கேட்டு இளைஞர்கள் சமூகப்பார்வை கொண்டவர்களாக மாண்புறு சமூகத்தை கட்டியெழுப்பும் செயல் வீரர்களாக உருப்பெற வேண்டும். அதற்கான வீரியமிகு விதைகளை கிறிஸ்தவ மகாநாடு 2011 விதைக்கும் எனும் நம்பிக்கையோடு நல்வாழ்த்துக் கூறி அதன் நினைவாக மலரும் இந்நினைவு மலருக்கு இறையாசீரை உவந்தளித்து மகிழ்கின்றேன்.

மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை
மன்னார் ஆயர்,
*22.08.2011*

இயற்கையோடு இணைந்து செயற்படும் போது மனித வளர்ச்சி நடைபெறுவதுடன், கல்வி மூலம் மனிதனுள் இருக்கும் இறைதன்மை ஆன்மீக உணர்வு என்பன வெளிப்பட வேண்டும் இன்றைய மாநாடு சிறப்புற எனது நல்வாழ்த்துக்கள்

திருமதி.சி.சுரேந்திரன்
ஆசிரிய கல்வியியலாளர்



# யாழ் மறைமாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச்செய்தி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் ஆனது தமது ஆன்மீக வளர்ச்சியினதும் அறிவின் வெளிப்பாடுமாகிய மலர் ஒன்றினை வெளியிடுவதைக் குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

எதிர்கால நல் ஆசிரியர்களாக உருவாகிக் கொண்டிருக்கும் நீங்கள் உங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தை பேணிப் பாதுகாப்பதிலும் அதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டு "கிறிஸ்தவ மாநாடொன்றை" நடாத்துவதைக் குறித்தும் பெருமை அடைகின்றேன்.

எனவே "இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே" என்னும் மையக் கருத்தில் வரும் உங்கள் மலருக்கு எனது ஆசிகளும், வாழ்த்துக்ளும் உரித்தாகுக. எதிர்காலத்தில் நற்சமூகம் உருவாகவும், அதன் கல்வி, ஒழுக்க வாழ்வுக்கு வழிகாட்டும் ஆசிரியர்களாக மிளிர இருக்கும் உங்கள் கல்வியும், ஆன்மீக வாழ்வும் சிறந்து விளங்க எனது வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக.

நன்றி

மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம், ஆண்டகை
யாழ் ஆயர்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.



# திருமலை மட்டு நகர் மறைமாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச்செய்தி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக் கிறிஸ்தவ மன்றம் கிறிஸ்தவ மாநாடு நடத்துவதையும் அதனை முன்னிட்டு சிறப்பு மலர் வெளியிடுவதையும் அறிந்து மிகவும் பூரிப்படைகிறோம். அத்துடன் இக் கிறிஸ்தவ மாநாடு இளையவர்களுக்கு விழிப்புணர்வூட்டி வழிகாட்டும் ஒரு மாநாடாக விளங்கவிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

எதிர்கால உலகின் நம்பிக்கை நட்சத்திரங்களாக விளங்குகின்ற இளைஞர்கள் ஆற்றலும் ஆக்கத்திறனும் மிக்கவர்கள் பிடிப்போடும் உறுதியோடும் செயற்பட வல்லவர்கள். தாம் தெரிந்து கொண்ட ஒன்றுக்காகத் தம்மையே அர்ப்பணிக்கத் தயங்காதவர்கள் உண்மையில் இவைகள் தெய்வீகப் பண்புகள் இவைகளைப் போற்றிப்பாதுகாத்து வளர்த்துவிடுதல் அனைவரதும் பொறுப்பாகும்.

இன்றைய நவநாகரீக வாழ்க்கை முறை வளர்ந்து வருகின்ற நவீன தொழில் நுட்பங்கள், பொருளாதாரக் கோட்பாடுகள், இளையோரை வளைத்துப் போடுகின்ற வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. இந்தப் பிரமாண்டங்களுக்குள் புதைந்து அள்ளுண்டு போகாமல் இவைகளை அளவோடும் ஆக்கத்திறனோடும் கையாண்டு மாநுடம் மேன்மையுறல் அவசியமாகும். இதனைத் தெளிவாகப் புரிந்து கொண்டதால் தான் திருச்சபை இளைஞர்களிடத்து மிகவும் அக்கறை காட்டுகிறது. இவ்வாண்டு ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற அனைத்துலக இளைஞர் மாநாடு இதைத் தெளிவாக அடையாளப்படுத்துகிறது.

இளையோருக்கு முக்கியமாக இரண்டு வித பொறுப்புக்கள் உண்டு ஒன்று தம்மை உருவாக்குவது வளர்ப்பது இரண்டு எதிர்கால சமூகத்தை மேம்படுத்த உழைப்பது எவ்வாறு பாலஸ்தீனத்து இளைஞனான இயேசு தம்முள் தெய்வீகத்தை வளர்த்து மானுட மீட்புக்காகத் தம்மைக் கையளித்தாரோ, அதுபோல் அவரது வழிகாட்டுதல் இளையோர்களை எதிர்கால உலகில் நம்பிக்கையோடு நடக்கச் செய்யும்.

இக் கிறிஸ்தவ மாநாடு இளையோருக்குப் பயனுள்ள விதத்திலே சிறப்பாக நடைபெறவும் அதனை முன்னிட்டு வெளிவருகின்ற சிறப்பு மலர் அழகுற அமையவும் நமது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குகின்றோம்.

**மேதகு யோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை**
**ஆயர் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டம்**

# மன்னார் மறைமாவட்ட குருமுதல்வரின் ஆசிச்செய்தி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் ஏற்பாடு செய்துள்ள "இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே" எனும் தலைப்பில் இடம் பெறும் கிறிஸ்தவ மாநாட்டை முன்னிட்டு வெளிவரும் நினைவு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இளமை என்பது குழந்தைப் பருவத்திலிருந்து வளரிளம் பருவத்திற்கு மாறும் ஒரு வளர்ச்சியின் படிநிலை இளமை இனிமையானது, மகிழ்ச்சியானது, மகத்தானது, எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை கொண்டது. வரலாற்றிலும் நிகழ்காலத்திலும் இளம் வயதில் சாதனைகள் படைத்தவர்களின் பட்டியல் நீளமானது. சமூகமாற்றங்கள் ஊடான பயணத்தில் தன்நம்பிக்கையோடு கூடிய செயற்பாடுகளினால் மாற்றங்களுக்கு இவர்கள் வித்திட்டுள்ளார்கள். அதனால் தான் "இளைஞர்களே நீங்கள் வருங்காலத்திருச்சபையின் நம்பிக்கை" என மறைந்த பாப்பரசர் மொழிந்திட அதற்கு வலுச்சேர்த்தாற்போல் "இளைஞர்களே இன்றைய திருச்சபை உங்களுடையதே" என்று முழங்கினார் இன்றைய திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர்.

எனவே இளைய சமுதாயம் தன்னம்பிக்கையைத் தட்டியெழுப்பி, மாண்புறும் வகையில் அவர்களின் ஆளுமையை விருத்தி செய்து மனித நேயப்பண்புகளை வளரச்செய்து ஆன்மீக வாழ்வில் வேரூன்றச் செய்வது அனைவரினதும் குறிப்பாக உயர் கல்வி நிறுவனங்களின் கடமையாகும். இதில் தேசிய கல்வியியற் கல்லூரி ஆற்றும் மகத்தான உருவாக்கல் பணியைப் பாராட்டி சமுதாயத்திற் உரிய விதத்தில் மேலும் பல இளம் உள்ளங்களை பயிற்றுவித்திட நல்லாசிகளையும் எனது செபங்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

வண.பிதா.அ.விக்ரர் சோசை,
குருமுதல்வர்,
மன்னார் மறைமாவட்டம்.

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ மன்ற ஆன்ம குருவின் ஆசிச்செய்தி

2011 கிறிஸ்தவ மாநாடு எழுச்சியடைய அர்த்தம் கொடுக்க என்னுடைய ஒரு சில வார்த்தைகள்

உண்மைக்கு மாறான செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற இக்காலகட்டத்திலே நீதியும் சகோரத்துவமும் புதைக்கப்பட்ட வேளையில், வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும். மக்களுக்கும், இன்னும் உலகியல் சாதனங்களுக்குள்ளே தங்களைப் பறிகொடுத்து மாண்டுகொண்டிருக்கிற சமூகத்திற்கும் இளைஞனே உன்னைக் கொடுத்து உயிர்ப்பாக்கத் தயாராகிவிடு.

இயேசு தன்னுடைய இளமைப் பருவத்தில் சவால்களுக்கு முகம் கொடுத்து, சிவப்புச் சிந்தனைகளை சரித்திரமாக்கிய படியால் சிவப்பு இரத்தமும் சிந்தி வெற்றி கண்டு புதிய அத்தியாயத்தை உருவாக்கினார்.

உனக்குள்ளே உறங்கிப்போயிருக்கிற இரத்தம் கொதிக்கட்டும், உனக்குள்ளே நெருப்பு எரியட்டும். உன்னைப் புடமிடட்டும் சரித்திர புருஷனாக வீறுகொண்டெழு, நெருப்பைப் பற்ற வைத்திடு. இன்றே மாண்புறு சமூகத்தை உருவாக்கிட வரலாறு படைத்திடு வருகின்ற தலைமுறை உன்னை வாழ்த்தட்டும் உன் பெயர் சொல்லட்டும்.

விரைந்து செயலிலே இறங்கி சரித்திரம் படைக்க என்னுடைய ஆசிகளும் வாழ்த்துக்களும்.

**கிறிஸ்துவில்**
**M.A.இயேஜசுராஜன் (ஜோன்சன்) O.M.I**
**நற்கருணை சிற்றாலயம்,**
**வ.தே.க.கல்லூரி,**
**வவுனியா**

# The message from the Commissioner,

It is pleasure and priviledge in sending the massage of wishing for this suvenior of Christian convention with the concept of "the youth the glory of the earth belong to you."

This convention will give a great opportunity to youths will teach them good moral norms and ethics through which they lead and acceptable and fruitful life.

I hope this convention help the youth to build cordial rerlationship, unity, peace and harmony in the society. This faith won't forsheke anyone forever.

I wish to express my sincere thanks to Mr.K.Bernard, the president of Vavuniya National College of Education. The chaplain, Vice president, all teacher educators, non accademic staff and prospective teacher students for their contribution for this convention.

Tissa Hewa Vithana
Chief Commissioner, T/E
Ministry of Education,
Isurupaya,
Bataramulla



# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அவர்களின் ஆசியுரை

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் இவ்வாண்டும் கிறிஸ்தவ மாநாடு 2011 இனை “இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே” என்ற மகுட வாக்கியத்துடன் நடத்துவதையிட்டு எனது நல்லாசிகளை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதுடன் இம்மாநாடு சிறப்புடன் நடைபெற்று வெற்றியடைய வாழ்த்துகின்றேன்.

தரமான ஆசிரியர்களை உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டுவரும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகளுக்கு அதன் கிறிஸ்தவ மன்றத்தின் இம்மாநாட்டு முயற்சி இன்னும் பலம் சேர்ப்பதாக அமையும் என நம்புகின்றேன். மாணவ ஆசிரியர்கள் கல்வி உலகுக்கு ஆசிரியர்களாக செல்லும் போது இவ்வாறான அனுபவங்களுடன் செல்வதற்கு இம்மாநாடு நிட்சயம்உதவும் என நம்புகின்றேன்.

“சர்வதேச இளைஞர்” ஆண்டு பிரகடனத்துக்கும் மன்னார் மறை மாவட்ட இளைஞர் ஆண்டு பிரகடனத்துக்கும் அதற்கான செயற்பாடுகளுக்கும் வலுச்சேர்க்கும் வகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தின் இம்மாநாட்டு முயற்சி வலுசேர்க்கக்கூடியதாக அமையும் என்பதையும் குறித்து பெருமிதம் அடைகின்றேன்.

பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வழிதெரியாது திகைத்து நிற்கும் சமகால இளைஞர் சமூகம் தொடர்பான கருத்துப் பரிமாறல்கள் இம்மாநாட்டின் அம்சங்களாக அமைவதும் கிறிஸ்தவ தமிழ் இலக்கியவாதிகளின் பெயரில் இரு அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றமையும் பாராட்டுக்குரியவைகளாகும்.

மாநாட்டின் நடைமுறைகளும் செயற்பாடுகளும் கிறிஸ்தவ விழுமியங்கள் மட்டில் அக்கறையுடைய அமைப்புகளுக்கு முன்மாதிரியாக அமையவேண்டும்.

கிறிஸ்தவ மாநாடு 2011 சிறப்புற வெற்றியுடன் நடைபெற இறையாசிகளை வேண்டுகின்றேன்.

நன்றி

க.பேர்ணாட்,
பீடாதிபதி
வ.தே.க.கல்லூரி



## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி [கல்வியும் தர மேம்பாடும்] அவர்களின் ஆசிச்செய்தி

2011.09.24ல் கிறிஸ்தவ மன்றம் "இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே" எனும் தொனிப் பொருளில் மாநாடு ஒன்றை நடத்துவது விளிப்புணர்வை ஏற்படுத்த வல்லது.

இத்தகைய சிந்தனைப் போக்குகள் சமூக வளர்ச்சிக்கு உரமூட்ட வேண்டும். இயேசுவினதும் மேரி மாதாவினதும் காந்தியினதும் சிந்தனைகள் ஒரு சமுதாயத்திற்கு மட்டும் சொந்தமானவை அல்ல என்பது முதலில் உணரப்பட வேண்டும். இன்றைய சமூக அசைவியக்கம் இவ்வாறான விடயங்களை ஜீரணித்தல் அவசியம்.

புனித விவிலியத்தில் பரிசுத்த யோவானின் செய்தியில் கூறப்பட்ட நல்ல மேய்ப்பனின் குரலுக்குச் செவிசாய்த்து கட்டுப்பட்டு அவனைப் பின்தொடரும் ஆடுகளைப் போலவும் தன்னைப் பின் தொடரக் கூடிய அளவுக்கு சிறந்த ஆளுமைப் பண்புகளைக் கொண்ட மேய்ப்பனாகவும் இன்றைய இளைஞர்கள் பிரகாசிக்க வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

நன்றி

கு.சிதம்பரநாதன்
உபபீடாதிபதி
(கல்வியும் தரமேம்பாடும்)
வ.தே.க.கல்லூரி



## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி [நிதி நிர்வாகம்] அவர்களின்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் "இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே" எனும் தொனிப் பொருளில் நடாத்தும் கிறிஸ்தவ மாநாடு 2011 இற்கு மகிழ்வுடன் ஆசி கூறுகின்றேன்.

இவ்வுலகத்தில் இளைஞர்களின் செயற்பாடுகள் தனக்குப் பொருத்தமானவையாக இருப்பதையே இறைவன் பெரிதும் விரும்புகின்றான். ஒவ்வொரு இளைஞரும் தனது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் செய்ய வேண்டிய கடமைகள் பெறுமதிமிக்கவை. ஒரு சமூகத்தை சிறப்பான முறையில் வழிநடத்தக்கூடிய ஆற்றலை இளைஞர்களிடத்தில் வழங்கி அதனூடாக அவர்கள் இவ்வுலகில் நேரான வழியில் நடப்பதை இறைவன் மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கின்றார்.

ஒருவனின் இறப்பிற்கும் பின்னர் அவரிடம் கேட்கப்படும் கேள்விகளில் மிகமுக்கியமானது "உனது வாலிபப் பருவத்தை உலகில் எப்படிக் கழித்தாய்"? என்பதாகும். ஓர் ஓடம் தனது இலக்கை சென்றடைய அதற்கு துடுப்பு எவ்வளவு முக்கியமோ அதே போல் ஒரு சமூகம் இறைவனுக்குப் பொருத்தமான சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ள அதன் இளைஞர்கள் துடுப்புப் போல செயற்பட வேண்டும்.

இளைஞர்கள் வழிதவறினால் அவர்கள் சார்ந்த சமூகத்தையே வழிகெடுத்து விடுவார்கள் அவர்கள் நேரான வழியில் நடந்தால் அவர்கள் சார்ந்த சமூகமும் நேரான வழியில் நடக்கும் இக்கால கட்டத்தில் தமது நேரான வாழ்க்கைக்கு வழிகாட்ட யாருமின்றித் தவிக்கும் எமது சமூகத்திற்கு நல்வழிகாட்ட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு இளைஞர்களிடத்திலும் தங்கியுள்ளது. இறைவனுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களும் இவர்களே.

இதனைக் கருத்திற் கொண்டே "இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே" எனும் தொனிப் பொருளில் இம்மாநாட்டினூடாக அறிஞர்களால் முன்வைக்கப்படும் கருத்துக்களினூடாக இளைஞர்கள் மாண்புறு சமூகத்தை உருவாக்க முன்வர வேண்டுமெனவும் இம்மாநாடு சிறப்புற நடந்தேற வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன்.

***ஜனாப் அல்ஹாஜ் சஹாப்தீன்,***
***உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்)***
***வ.தே.க.கல்லூரி.***



# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ மன்றக் காப்பாளரின் ஆசிச்செய்தி

வளம் பெருக்கும் இளமைப் பருவத்தினரை மையமாக வைத்து “இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே” என்னும் தலைப்பில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்த மன்றத்தினால் நடத்தப்படும் மாநாடானது மகிழ்ச்சி தருவதும் பயனுறுதிமிக்கதுமாகும். கடந்து கொண்டிருக்கும் கணங்கள் யாவும் புதுமைகளை விதைத்துச் செல்கின்றன. புதுமைகளுள் பயன் மிக்கவற்றை தெளிவாக ஆய்ந்தறிந்து தமதாக்கி வாழ வேண்டியவர்களே இளைஞர்கள்.

உலக மயமாக்கலுக்குள் சிக்கி உலகியல் மயமாகிப் போகாமல் தம் ஆன்மாவைக் காத்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு இளைஞர்களுக்கு உண்டு. அதுமட்டுமின்றி சமூகத்தின் மட்டில் இளைஞர்களுக்கு உள்ள பொறுப்புணர்வு அவசியமானது. சமூகமும் இளைஞர்களின் மட்டில் புரிந்துணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் வழிநடத்த வேண்டியதாக உள்ளமை உணரப்பட்டுள்ளது. தலைவர்கள், பெரியோர், பெற்றோர், அசிரியர் ஆகியோர் இளைஞர்களின் நல்வாழ்வில், வளர்ச்சியில், விருத்தியில் அக்கறையுடையோராய் செயற்பட வேண்டும். இத்தகைய கருத்தூட்டங்களுடன் சமூகத்திற்கு செய்தியொன்ற விடுக்க முனைந்து செயற்படும் இம்மாநாடானது இனிதே நடந்தேறவும் போதிய வெளியீட்டை வழங்கவும் வாழ்த்தி இறையாசி வேண்டிநிற்கின்றேன்.

“இறைவா உம் பணி புரிய அடியேன் இதோ...”

**திரு.மி.சூசைதாசன்**
**காப்பளர், கிறிஸ்தவ மன்றம்,**
**வ.தே.க.கல்லூரி.**



# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் இணைப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

இதயங்களுக்கிடையிலான அன்பின் பரிமாற்றம், உறவுகளை பலப்படுத்தும் உறவுகள் பலமாகும் போது உண்மையான சமூகப்பற்று உருவாகும் உண்மையான சமூகப்பற்று இனம், மொழி, மதம், பால்வேறுபடுகள் என்பவற்றைக் கடந்து புனிதமான சமாதான தேசியத்திற்கும் இட்டுச்செல்லும்.

மனவருத்தங்கள், எதிர்பார்ப்புகளில் எழுந்த ஏமாற்றக்காயங்கள், இழப்புக்கள் தந்துவிட்டுச்சென்ற ஆறாத உளப்பாதிப்புக்கள், தொடரும் நிம்மதியற்ற இரவுகள் என நீளும் எம் பயணத்தில். எப்போதும் எமக்கு நம்பிக்கையையும், ஆறுதலையும், துணிவையும் தந்து இலக்கு நோக்கிய எமது பயணத்தினை இட்டுச் செல்லும் உந்துசக்தியாக இருப்பது ஆன்மீக தேடல்களே ஆகும்.

ஆன்மீகத் தேடல்கள் எம் வாழ்க்கை அனுபவங்களோடு ஒட்டியதாகவும், எமது பிரதிபலிப்புகளின் ஊடாக எழுவதாகவும் அமையும்போதே அவை உண்மையான அர்த்தத்தை எம்வாழ்வில் உருவாக்கும். மனித இதயங்களில், மனிதச் செயற்பாடுகளில் மனித பிரார்த்தனைகளில் தாக்கத்தைச் செலுத்தாத ஆன்மீகத்தேடல்கள் இன்றைய எமது வாழ்வின் கோலங்களிலும், அவலங்களிலும், அமைதியை ஏற்படுத்தவதற்கு பதிலாக மேலும் சிக்கல்களையே தோற்றுவிக்கும் வாழ்க்கையோடு ஒட்டிய ஆன்மீக தேடல்கள் நாம் இருக்குமிடத்திலேயே எளிமையாக ஒற்றுமையோடு உருவாக்கப்படல் வேண்டும்.

எமது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவமன்றம் முன்னெடுக்கும் கிறிஸ்தவமாநாடு - 2011 ஒரு அர்த்தமுள்ள ஆன்மீக தேடலாகும். ஆசிரியர்கள் ஆன்மீகத்தின் தேடலில் தம்மை பற்றுறுதியுடன் இணைத்துக் கொள்ளவும், நாளைய வழிகாட்டலுக்கான முன்மாதிரி அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளவும் களம் அமைக்கும் இம் மாநாடு சிறப்புற நடைபெற வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மாநாடு அன்பு, கருணை, பரஸ்பரகௌரவம், உதவுதலும் ஒன்றுபடுதலும், பகிர்வதில் திறந்த தன்மை அங்கீகாரமும் தூண்டுதலும் என அமைந்த ஆன்மீக நன்னெறிகள் உலகெங்கும் பரவ அடிப்படையாக அமையட்டும்.

வாழ்த்துக்கள்.

**க.சுவர்ணராஜா,**
**விரிவுரையாளர் இணைப்பாளர்,**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,**
**வவுனியா.**

கிறிஸ்தவ மாநாடு 2011

# "இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே"

## மாநாட்டின் நோக்கங்கள்

01. வாழ்க்கையில் பல சவால்களை எதிர்நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர்களை இறை இயேசுவில் நம்பிக்கை உடையவர்களாக மாற்றுதல்.

02. விசுவாசத்தில் தளர்ந்திருக்கும் இளைஞர்களுக்கு இறை பராமரிப்பையும் இறை அன்பையும் அனுபவிக்க வழியமைத்துக் கொடுத்தல்.

03. கடவுளுக்கும் மனிதருக்கும் ஏற்ற சிறந்த இளைஞர் சமூகத்தை கட்டியெழுப்புதல்.

04. உயிரோட்டம் மிக்க சாட்சிகளாக இளைஞர் யுவதிகளை விசுவாச வாழ்வில் ஈடுபடச் செய்தல்.

05. எமது நாட்டிற்குப் பொருத்தமான, ஒத்துப் போக்க கூடிய சாட்சிய வாழ்வை இனங்கண்டு நடைமுறையில் கைக்கொள்ளும் இளைஞர்களை உருவாக்குதல்.

06. சர்வதேச இளைஞர் ஆண்டு - 2011 பிரகடனத்திற்கு வலுவூட்டல்.

## மாநாட்டின் முக்கியத்துவம்

01. தற்கால சூழ்நிலையில் வாழ்வின் சுவை இழந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் திடம் பெற்றெழுந்த புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துதல்.

02. நல்ல கிறிஸ்தவ விழுமியங்களூடாக மாண்புறு சமூகத்தைக் கட்டியெழுப்ப இளைஞர் யுவதிகளை வழிப்படுத்தல்.

03. சமூகத்தில் உயிரோட்டம் மிக்க சாட்சிகளாக இளைஞர் யுவதிகளை உருவாக்க வழி அமைத்தல்.

04. இளம் மாணவ ஆசிரியர்களுக்கு சவால் மிக்க சமூக வாழ்வு நோக்கிய பரீட்சயத்தை ஏற்படுத்தல்.

05. மாணவ ஆசிரியர்கள் தமது எதிர்கால தொழில் வாழ்க்கைக்குத் தேவையான நிகழ்கால அனுபவங்களை வழங்குதல்.

06. அர்ப்பணிப்பு மிக்க கிறிஸ்தவ ஆசிரியர்களுக்கான அடிப்படைத் திறன்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

## எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

01. தற்கால உலகில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளவும் தமது வாழ்க்கையை உறுதிப்படுத்தவும் அதனூடாக வாழ்வைக் கட்டியெழுப்பவும் திட சங்கற்பம் பெற்றுக்கொள்வர்.

02. அர்த்தமுள்ள ஆழமான விசுவாச வாழ்வை தாமும் வாழ்ந்து சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்பும் நல்ல மனநிலையைப் பெற்றிருப்பர்.

03. இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் தமது சிந்தனைகளைச் செலுத்தி தமது திறமைகளை அர்ப்பணித்து மாண்புறு சமூகத்தைக் கட்டியெழுப்ப முனைவர்.

04. இளைஞர் யுவதிகளுக்கிடையேயான முரண்பாடான எண்ணங்கள், சிந்தனைகளைத் தகர்த்தெறிந்து ஒற்றுமை உணர்வுடன் செயற்பட விருப்பம் கொள்வர்.

05. இயேசுவின் போதனைகள் தற்கால சமூக கோட்பாடுகளுடன் ஒன்றித்துப் போகின்றன என்பதை தாமாகவே விளங்கிக் கொள்வர்.

06. "இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே" என்ற மாநாட்டின் கருப்பொருளுக்கு ஏற்ப தமது வாழ்வை மாற்றிக் கொள்ள முனைவர்.

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ மாநாடு - 2011

"இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே"

காலம் : 24.09.2011
இடம் : பலநோக்கு மண்டப அரங்கு,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## நிகழ்வன

நேரம் : மு.ப

9.00 - விருந்தினர் வரவேற்பு
9.10 - ஒளியேற்றல்
9.15 - இறைவழிபாடு, தூய ஆவியானவர் பாடல்
(என்னை வழிநடத்தும் தூய...)
9.25 - வரவேற்புரை
9.30 - வரவேற்பு நடனம்
9.40 - தொடக்க உரை, பேரருட் திரு.எஸ்.ஜெபநேசன்
அங்கிலிக்கன் இளைப்பாரிய ஆயர்
9.45 - ஆசியுரை மன்னார் மறை மாவட்ட ஆயர்
9.50 - மாநாட்டின் நோக்கங்கள் - பீடாதிபதி
10.00 - இறை ஒன்றிப்பு - பஜனை
(தாய் மடியில் தவழுகின்ற)

10.10 - <u>அமர்வு -I</u>

அரங்கு - ஆயர் ஜெ.எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை அ.ம.தி அரங்கு
நடத்துனர் - திரு.S.K.மரிய நாயகம், அதிபர்
வ/இலுப்பைக்குளம் அ.த.க பாடசாலை,
வவுனியா.
புகழ்ப்பா - திருப்பாடல்கள் 103
ஆசியுரை - மட்டுநகர் ஆயரின் ஆசிச்செய்தி
பாடல் - (நீங்க மட்டும் இல்லாதிருந்தா...)
தலைப்பு - சமகால இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்களும் தீர்வுகளும்

உரை - "உலக மயமாதல்"
திருமதி.யு.ஸ்ரான்லி டிமெல்
பிரதேச செயலாளர், மன்னார்,
(20 நிமிடங்கள்)

உரை - "அனர்த்தங்கள்"
அருட்பணி றெஜினோல்ட் பிரான்சிஸ்
இயக்குனர், மறைக்கல்வி நடுநிலையம்
மன்னார். (20 நிமிடங்கள்)
கலந்துரையாடல் - (10 நிமிடங்கள்)

பாடல் - (இன்பக் கனவொன்று)
11.15 தேநீர் இடைவேளை

11.30 - **அமர்வு - II**

அரங்கு - (அமுது) அடைக்கலமுத்து அரங்கு
நடத்துபவர் - திருமதி.S.அன்ரன் சோமராஜா
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வவுனியா தெற்கு.
புகழ்ப்பா - திருப்பாடல் 96
ஆசியுரை - யாழ் ஆயரின் ஆசிச்செய்தி
பாடல் - (என் இதயம்)
தலைப்பு - தற்கால இளைஞர்களின் பங்கு
உரை - இளைஞர்களுக்கான சமூகப் பொறுப்புக்கள் (20 நிமிடங்கள்)
திரு.இரட்ணசிங்கம் அன்ரன் திலகரட்ணம்
நிர்வாக உத்தியோகத்தர், மனித முன்னேற்ற நடுநிலையம், யாழ்ப்பாணம்
உரை - இளைஞர்கள் மட்டில் சமூகத்தின் பொறுப்புக்கள்
அருட்பணி கலாநிதி மைக்கல் APR சவுந்தரநாயகம் (20 நிமிடம்)
இயக்குனர்
புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடம்
யாழ்ப்பாணம்
கலந்துரையாடல் - (10 நிமிடங்கள்)
பாடல் - (கடல் கடந்து சென்றாலும்)
1.00 பி.ப - மதிய உணவு
2.00 - கலையரங்கம்

1. வ.தே.க.கல்லூரி
2. நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி
3. யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

நன்றியுரை
கல்லூரிக் கீதம்

# அரங்கம் - 01



## ஆயர் ஜெ.எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி ஆண்டகை அரங்கு

ஆயர் ஜெ.எமிலியானுஸ் பிள்ளை அவர்கள் 1901ஆம் ஆண்டு ஜீலை மாதம் இருபதாம் திகதி பிறந்தார் கொழும்பிலே உயர்கல்வி முடித்தபின் அமலமரித் தியாகிகள் துறவற சபையில் சேர்ந்து உரோம் நகர் சென்று வேத கல்வியிற் சிறப்பெய்தினர், தாய்நாடு திரும்பிய பின் ஆசிரிய கலாசாலைத் தலைவர், றோமன் கத்தோலிக்கப் பாடசாலைகளின் பொது முகாமையாளர் குரு முதல்வர் போன்ற பொறுப்பான பதவிகளை வகித்தார். 1949 மார்ச் 11ல் ஆயர் கியோமரின் உதவி ஆயராக நியமனம் பெற்று அவர் இளைப்பாறியதன் பின்னர் 1950 ஆகஸ்ட் 25ல் யாழ்ப்பாண ஆயராகப் பதவியேற்றர்.

அவரின் 22 வருட பணிக்காலத்தில் விஞ்ஞானத்தால் ஏற்பட்ட புரட்சியினால் விண்வெளி ஆய்வு, யுத்த பீதி, பொருளாதாரம், வியாபாரம் என்பனவற்றின் முன்னேற்றத்தால் கல்வி, கலாசாரம், அரசியல் போன்றவை சமயச்சிந்தனையை சாக்கடைக்குள் தள்ளின. இது ஆன்மாக்களை சீரழிக்கும் ஆபத்தை உருவாக்கியது. ஆன்மீக வழிகாட்டும் ஆயன் இந்த நச்சுப் புதர்களை விலக்கி பச்சைப் புற்தரைகளுக்கு மந்தையை நடத்துவது அவசிய கடமையாயிற்று.

காட்டுப்பகுதிகளில் குடியேற்றத் திட்டங்கள் பெருகிய போது அங்கே கத்தோலிக்கரின் கல்விக்காக கோவில்களும் பாடசாலைகளும் அமைக்கப்பட்டபோதும் 1960ல் அரசாங்கம் எல்லாப்பாடசாலைகளையும் கையகப்படுத்தியது. இக் கொள்கையை எதிர்த்துப் பலன் கிட்டாமல் போகவே கிடைக்கப்பெற்ற சில சிபாரிசுகளைக் கொண்டு ஐந்து கல்லூரிகளை அரசின் உதவியின்றி தனியார் தாபனங்களாக நடத்த ஆயர் துணிந்தார்.

காலத்துக்குக் காலம் அதிகரித்து வந்த சனத் தொகையினால் போதிய மறைப்பணியினை வழங்க உரோம், இந்தியா, கனடா போன்ற இடங்களுக்கு மாணவர்கள் பயிற்சிக்காக அனுப்பப்பட்டு உருவாக்கப்பட்டனர். 36க்கும் அதிகமான குருக்களும் இரண்டு ஆயர்களும் இவரின் சேவைக் காலத்தில் உருவாகினார். வெறுமனே குருக்கள், சந்நியாசிகளுக்கு மாத்திரமில்லாமல் பொது நிலையினருக்குமான ஞான ஒடுக்க இல்லங்கள் கொழும்புத் துறையிலும் பண்டத்தரிப்பிலும் தொடங்கப்பட்டது.

கானகத்தினிடையே காட்சியளிக்கும் மடுமாதா யாத்திரை ஸ்தலம் யாத்திரிகர்களின் தேவை கருதி முழு வசதிகளுடன் அமைக்கப்பட்டது. குறிப்பாக மின்சாரம், குடிநீர் வசதி, தங்குமிட வசதி, சுகாதாரம், போக்குவரத்து வசதிகள் போன்றவை.

திருச்சபைச் சரித்திரத்தில் ஒரு எல்லைக் கோபுரமான இரண்டாம் வத்திக்கான் சங்கம் உரோம் நகரில் நடைபெற்ற போது அதன் நான்கு அமர்வுகளிலும் பங்கு கொண்ட ஆயர் அவர்கள் திரும்பி வந்து அங்கு நடந்தவைகளைப் பற்றி விளக்கம் கொடுத்தார். அதன் முடிவில் வெளியான 16 ஏடுகளும் நெடுங்காலமாக விளக்கப்பட்டன.

ஆயர் அவர்கள் நோயுற்றிருந்த போதிலும் செந்தளிப்பாகவும் உற்சாகமாகவும் தனது பணிகளைக் கவனித்து வந்தார். இறுதியில் 1972 யூலை 17ம் நாள் இரவு 11.45 மணியளவில் இறைவனில் இளைப்பாறினார். அவரால் தொடங்கப்பட்ட பணிகள் இன்றும் அவரால் உருவாக்கப்பட்டவர்களால் தொடர்ந்து ஆற்றப்பட்டு வருகின்றது.

| | | |
|---|---|---|
| **நடத்துனர்** | - | **திரு.S.K. மரியநாயகம்**<br>**அதிபர்.வ/இலுப்பைக்குளம்.அ.த.க.பாடசாலை** |
| **தலைப்பு** | - | **சமகால இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்கள** |

# உலக மயமாக்கலில் இளைஞர் எதிர்நோக்கும் சவால்கள்

விஞ்ஞானத்தின் வளர்ச்சியைக் கண்டு மனிதன் வியந்து நிற்கும் இக்கால கட்டத்தில் அதனுடைய எதிர் விளைவுகளால் பாதிக்கப்படும் மனித சமூகத்தை எண்ணிப்பார்க்க வேண்டிய தேவைப்பாடும் அதனை முற்றாக நிறுத்த முடியாவிட்டாலும் தாக்கத்தை குறைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்குரிய தேவைப்பாடும் தற்போது உணரப்பட்டு வருகின்றது.

01. சாத்தானின் செயற்பாடுகள் பூமியில் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதை உணர முடியாத நிலையிலுள்ள இளைஞர் சமூகம்.

02. பாரம்பரியங்களிலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கின்ற இளைய தலைமுறை.

03. ஊடகங்களினால் வலுவாக ஈர்க்கப்பட்டிருக்கின்ற இளையவர்கள்.

04. ஆன்மீகத்தை மழுங்கடிக்கும் கலாச்சார சீர்கேடுகள்.

இவற்றுக்கு மத்தியில் ஒரு கிறிஸ்தவ இளைஞனாக ஆற்ற வேண்டிய கடமைகள் பொறுப்புக்கள் என்ன?

**திருமதி.அ.ஸ்ரான்லி டிமெல்,**
**பிரதேச செயலாளர்,**
**மன்னார்.**

இறைவன் தன்னை நோக்கி மன்றாடுபவர்களுக்கு மிக அருகில் உள்ளார்.

திரு.S.பற்றிக் ஜெராட்
விரிவுரையாளர்
வ.தே.க.கல்லூரி

# சமகால இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

## இயற்கை அனர்த்தங்களின் பின்

இயற்கையின் சக்திகளை தனது கட்டுக்குள் மட்டுப்படுத்த மனிதகுலம் அது தோன்றியதிலிருந்து முயற்சி செய்து வந்திருக்கின்றது. இம்முயற்சியில் ஓரளவிற்கு வெற்றி கண்டு இருந்தாலும் அது முழுமையடையவில்லை. அனர்த்தங்கள் இயற்கையாலும் மனிதனாலும் இரண்டு வகையாக உண்டாக்கப்பட்டவையாகும்.

ஒரு அனர்த்தத்தின் பின்பு பல்வேறு மனித தேவைகள் ஏற்படுத்தப்படுகன்றன அவையாவன;

1. உடல் சார்ந்த தேவைகள் 2. உணர்வு சார்ந்த தேவைகள்
3. புத்தி சாரந்த தேவைகள்

இயற்கை அனர்த்தம் ஒன்றினால் நேரிடையாகப் பாதிக்கப்பட்டவர் அன்றி உணர்வு ரீதியாகப் பாதிக்கப்பட்டவரில் பல்வேறு புத்தி சாரந்த கேள்விகள் எழுகின்றன. இக்கேள்விகளில் பல அவருக்குள்ளேயே கேட்கப்படுகிறது. சில அவருக்கு புறம்பே இருந்து எழுப்பப்படுகின்றன. சுயாதீன புத்தி கொண்ட எம் மனிதரும் இவற்றிற்குப் பதில் தேட முனைகின்றனர். இத்தேடல் அநேக தடவைகளில் ஒருவர் கொண்டிருக்கக்கூடிய சமநிலையை ஆட்டம் காணச் செய்கிறது. ஏனெனில் ஒருவர் கொண்டிருக்கும் நம்பிக்கைக் கூற்றுக்களை இக்கேள்விகள் கேள்விக்குள்ளாக்குகின்றன.

மெய்ப்பொருளை கண்டடைவைதற்கான தேடலை பல்வேறு வழிகளிலே மேற்கொள்ளலாம். அது உடல் சார்ந்த தேவைகளின் நிறைவு பற்றியதாகவோ, உணர்வு சார்ந்த தேவைகளின் நிறைவு பற்றியதாகவோ அத்துடன் புத்தி சார்ந்த தேவைகளின் நிறைவுெ பற்றியதாகவோ இருக்கலாம். இவை மேலும் ஒரு பேரிடர் ஏற்படுகையில் அதை எதிர்கொள்வதற்கு மனித குலம் எவ்வாறு தன்னை சிறந்த முறையில் தயார் நிலையில் வைத்திருக்க விரும்புகிறது என்பதற்கான பதிலாய் அமையலாம்.

மேற்சொன்ன தயார் நிலைக்கு அப்பால் சென்று மனித ஆன்மாவை அது கொண்டிக்கும் நம்பிக்கையின் உண்மைத்தன்மை பற்றிய கேள்விகளுக்கு உடல் சார்ந்த, உணர்வு சார்ந்த, புத்தி சார்ந்த தயார் நிலை பதிவிலிக்காது என்பதால் வேதாகமக் கண்ணோட்டம் இத்தேடலுக்கு என்ன பதிலை தன்னகத்தே கொண்டிருக்கிறது என்பதே எமது தேடலின் கருவாகும்.

**அருட்பணி றெஜினோல்ட் பிரான்சிஸ்,**
**மறைக்கல்வி நடு நிலையம்,**
**மன்னார்.**

# அரங்கம் - 02



அமரர்

ச.அமுதசாகரன் அடைக்கலமுத்து (அமுது)

அரங்கு

அமரர் அடைக்கலமுத்து அவர்கள் 1918 செப்ரம்பர் 15 அன்று யாழ் நெடுந்தீவில் பிறந்தார். இவருடைய தந்தை கணோகரர் தம்பிமுத்து தாய் சேதுப்பிள்ளை ஆவார். இவரின் திருமுழுக்குப் பெயர் அடைக்கல முத்து ஆகும்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை நெடுந்தீவு புனித பிரான்சிஸ்கு சவேரியார் கத்தோலிக்க பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ்/புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை கொழும்பத்துறை புனித சூசையப்பர் சாதனை கழகத்திலும் கற்றார். 1938ல் யாழ் /புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தற்கு உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார். 1944ல் திரேசம்மா என்பவரை மணம் முடித்து பத்துப் பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்தார். அவரின் இரண்டாவது மகன்தான் பேராசிரியர் அருட்திரு. சந்திரகாந்தன் ஆவார்.

இனிமையான தமிழாலே செழுமைமிகு கவிதைககளாய் படைத்து தமிழின் சுவைக் கடலைச் சுவைத்தது மட்டுமின்றி தமிழ்மொழி உலகத்திலும் கத்தோலிக்க சமூகத்திலும் தனது கைவரிசையைக் காட்டியவர் குறிப்பாக கத்தோலிக்க மறைப்பணியாற்றுபவர்களில் இவர் ஒரு பெரியாழ்வாராகத் திகழ்கிறார். தான் பிறந்து வளர்ந்த மண்ணையும் மொழியையும் பேண வேண்டும் என்பதில் அவருக்கிருந்த ஈடுபாடே பல்வேறு துறைகளிலும் அவரை இனங்காட்டக் காரணமாயிருந்தது.

மரியன்னை மேல் கத்தோலிக்கர் கொண்டிருக்கும் பக்திக்கு எடுத்துக்காட்டாக மடுத்திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் மரியன்னை மீது காவியம் பாடியுள்ளார்.

மேலும் இவரது இலக்கிய உலகில் முதலாவது கைவரிசையாக வெளிவந்தது. "மாதா அஞ்சலி" என்னும் நூலாகும். இதனை தனது 22

வயதில் வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இவரது ஆய்வு நூல்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

01. காக்கும் கரங்கள் - சில்லாலை சித்த வைத்தியர், இன்னாசித்தம்பி,

02. இவ்வழிச் சென்ற இனிய மனிதன் - திருக்குடும்ப கன்னியர் சபை ஸ்தாபகர் பீற்றர் பியன்வெனு தோவாய அவர்களின் வரலாற்றைத் தாங்கிய நூல்.

03. நெஞ்சே நினை - சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்க்கை வரலாறு.

04. அன்பின் கங்கை அன்னை தெரேசா - அன்னை தெரேசாவின் வாழ்க்கை வரலாறு

05. இளவாலை புனித அன்னம்மாள் ஆலய வரலாறு

நூல்களை படித்தது மட்டுமல்லாது பல கட்டுரைகளையும் நாடகங்களையும் எழுதினார்.

இவருடைய பெயரின் முதல், இடை, கடை எழுத்துக்களைத் தாங்கியதே "அமுது" என்ற புனைப் பெயராகும். இறுதியாக 2010 பெப்ரவரி 24 அன்று தம் பணியை நிறைவு செய்து இறைபதம் அடைந்தார்.

நடத்துனர் - திருமதி அன்ரன் சோமராஜா
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வவுனியா தெற்கு

தலைப்பு - தற்கால சமூகத்தில் இளைஞர்களின் பங்கு

# இளைஞர்களுக்கான சமூக பொறுப்புக்களும் கடமைகளும்

❖ இளைஞர்கள் என்பவர் யார்?

இளைஞர்

- உடற் கூறியல் நிலைப்பாட்டில்
- உள உணர்வு நிலைப்பாட்டில்

இளைஞர் குடும்ப அடிப்படையில்

இளைஞர் சமுதாய அடிப்படையில்

இளைஞர் நாட்டு அடிப்படையில்

❖ பொறுப்பு

தன் நிலை சார்ந்தது

குடும்பம் சார்ந்தது

சமூகம் சார்ந்தது

SWOT ANALYSIS

❖ தயார்ப்படுத்தல்

"நான்" அடையாளங் காணல்

"நான்" சமூகத்தில்

"நான்" அபிலாசைகளில்

❖ வாய்ப்புக்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தல்

தாலந்து உவமை (மத் 25:14-30)

மக்கள் இனத்தார் அனைவருக்கும் தீர்ப்பு (மத் 25:35-45)

❖ சவால்களை எதிர்கொண்டு செயற்படுதல்

இளைஞர் சில குறிப்புக்கள்

❖ பொறுப்புக்கள் உணரப்படுதல் கடமைகள் நிறைவேற்றல்

பங்குபற்றுதல்

தலைமை தாங்கல்

திரு.இரட்டணசிங்கம் அன்ரன் திலகரட்ணம்,
மனித முன்னேற்ற நடு நிலையம்
நிர்வாக உத்தியோகத்தர்
இல: 14, யாழ்ப்பாணம்.

# இளைஞர்கள் மட்டில் சமூகத்தின் பொறுப்புக்களும் கடமைகளும்

## உரைக் குறிப்புக்கள்

❖ யார் இளைஞர்கள்?

❖ வயது எல்லை 18-24? 15-24?
10-18 என்ற நிலையிலிருந்து வளர்ந்தவராக கருதப்படுகின்ற நிலைக்கு மாறுவதற்கு முன் உள்ள காத்திரமான இடைநிலை.

❖ இந்த நிலை மாற்றத்தில் குறிப்பாக சமூகத்தில் வளர்ந்தோரின் பங்கு.

❖ இளைஞர்கள் ஏற்புடைய நிலை அற்றவர்களாக சமூகத்தால் கருதப்படல்.

❖ உடல் அமைப்பு ரீதியான மாற்றங்களின் தாக்கம்.

❖ சமுதாயத்தில் இளைஞரின் விகிதம்.

❖ தலைமைத்துவத்தில் ஈடுபட சந்தர்ப்பம் கொடுத்துப் பார்த்தல்

❖ தீர்மானங்களின்போது இளைஞர்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல்.

❖ இளைஞர்களின் உண்மையான சக்தி நிலையை உள்ளபடி ஏற்றுக் கொள்ளப் பழகுதல்.

❖ இளைஞர்களின் திறன் விருத்தியை ஊக்குவித்து உதவுதல்.

❖ வாழ்வு முன்னேற்றத்தில் ஈடுபட வாய்ப்பளித்தல்.

❖ சமூகத்தின் தற்போதைய உண்மை நிலை பற்றிய அறிவை இளைஞர்கள் பெற்று திறந்த விவாதத்தில் ஈடுபட களம் அமைத்துக் கொடுத்து சிறப்புப் பயிற்சிபெற்றோரின் உதவியுடன் அத்தகைய நிகழ்வுகளை நெறிப்படுத்தல்.

❖ ஒரு கிராமத்திலோ, நகரத்திலோ வாழுகின்ற இளைஞர்களுக்கு கிடைக்க வேண்டிய கல்வி, தொழிற்பயிற்சி, திறன் விருத்திக்கான வாய்ப்புகளில் காணப்படுகின்ற குறிப்பிடத்தக்க வித்தியாசங்களை, சமமான சந்தர்ப்பம் இன்மையை, பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளுதல்.

❖ வெவ்வேறு ஊர்களுக்கிடையே நல்லுறவு ஏற்படுத்துவதில், பிணக்குகளை தீர்ப்பதில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்கள் செய்யக்கூடிய காத்திரமான பங்களிப்பை மதித்து ஏற்றுக்கொண்டு சந்தர்ப்பம் அளித்தல்.

❖ சமூகம் பற்றிய இளைஞர்களின் எண்ணங்களை ஏற்றுக்கொள்ளல்.

❖ இளைஞர்களின் செயலாற்றுகையின் போது அவர்களை ஏற்றுக்கொள்ளல், ஊக்குவித்தல்.

❖ இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளை அதில் உள்வாங்குவது தொடர்பாகவும் கற்றுக்கொடுக்க வேண்டும். உதாரணம்: கடற்றொழில், கமத்தொழில், கட்டடத்தொழில்.

- அனுபவசாலிகளும், பெரியோரும் இளையவர்களுக்கு வாழக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

- இளையவர்கள் மூழ்கியிருக்கும் மாயைகளின் கட்டுக்களை அவிழ்த்து விட வேண்டியது சமூகத்தின் கடமையாகும்.

- எமது சமூகத்தில் மரபு ரீதியாகவே வேரூன்றியுள்ள சாதியம், பிரதேச வாதம், தீண்டாமை, போன்றவற்றில் பெரும்பாலான இளையவர்கள் அதீத ஈடுபாடு அற்றவர்களாகவே காணப்படுகிறார்கள். எனவே அவற்றினை தூண்டாத வகையில் அவற்றை முற்றாக நீக்க வேண்டியதற்கான வழிமுறைகளையும், எமது சமூகம் எட்ட வேண்டிய நிலைகள் பற்றிய தூரநோக்கான சிந்தனையினையும் அவர்களிடம் வளர்க்க வேண்டும்.

- கடந்த கால அழிவுகளினால் பாதிப்புற்றிருக்கும் தமிழ் இளைஞர்கள் மீண்டும் எழுவதற்கும் கலாசார சீர்கேடுகளில் சிக்காதிருக்கத் துணைபுரிதல்.

- இளைஞர்கள் ஈர்க்கும் உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளில் இளைஞர் ஈடுபட வழிகாட்டுதல்

- இளைஞர்களை தன்னம்பிக்கை உடையவர்களாக வளர்த்தெடுப்பதுடன் அவர்கள் மீது நம்பிக்கையும் கொண்டிருக்கவும் வேண்டும்.

- சுதேச கலை, கலாசார கூறுகளின் மேன்மையினையும், அவற்றுக்குள் ஒழிந்திருக்கும் ஒழுக்கம் சார் விழுமியங்களையும் கற்பிக்க வேண்டும்.

- இளைஞர்களின் பிரச்சினைகளில் ஈடுபட்டு செயல்படுவதில் பிறர் செய்வார்கள் என்று விட்டுவிடாமல் உடனே செயற்படுவது அவசியம்.

- அனைத்துக்கும் மேலாக சமூகத்திலுள்ள பெரியவர்கள் இளையோருக்கு முன்னுதாரணமாக வாழ வேண்டும்.

அருட்திரு கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம்
அதிபர், புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவ உயர் கல்லூரி,
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

# பாடல்கள்

## என்னை வழிநடத்தும்

என்னை வழி நடத்தும் தூய ஆவியே
என்னில் வல்லமை பொழிந்திடுமே
யோர்தான் நதியில் எழுந்தவரே
வல்லமை பொழிந்திடுமே

அஞ்சிய சீடர்கள் நடுவினிலே
நெருப்பாய் இறங்கினீரே } 2
அஞ்சிடும் மாந்தர் எம் நடுவில்
நெருப்பாய் இறங்கிடுமே } 2

பவுலையும் சீலாவையும் சிறையினின்று
விடுவித்து நடத்திச் சென்றீர் } 2
சிறையிலே வாடும் எம்மவரின்
விலங்குகள் உடைத்திடுமே } 2

அறநெறி வாழ்ந்து அறிவினைப் பெற்று அன்பு பகிர்ந்து அயலுடன் கூடி இறைநாமம் கூறி இன்புற்ற இருக்க இளையே துணை

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தினால் இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையது என்ற தலைப்பில் நடாத்தப்படும் மாநாட்டுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் அடைகிறேன்.

திருமதி.ச.சத்தியசீலன்,
விரிவுரையாளர், வ.தே.க.கல்லூரி

# தாய் மடியில்

தாய் மடியில் தவழுகின்ற குழந்தையைப் போல
தகப்பனே உம் மடியில்
சாய்ந்து விட்டேன் நான்

I

கவலையில்லையே கலக்கமில்லையே
கர்த்தர் கரம் பிடித்துக் கொண்டேன் - நான்
கர்த்தர் கரம் பிடித்துக் கொண்டேன்
எதைக் குறித்தும் பயமில்லையே
என் நேசர் நடத்துகிறீர்

II

செய்த நன்மைகள் நினைக்கின்றேன்
நன்றியோடு துதிக்கின்றேன் - நான்
நன்றியோடு துதிக்கின்றேன்
கைவிடாத என் ஆயனே
கல்வாரி நாயகனே

III

துணையாளரே துணையாளரே
இணையில்லா மணவாளரே - என்
இணையில்லா மணவாளரே
உணவாக வந்தீரையா
உயிரோடு கலந்தீரையா

IV

உன்னைத்தானே பற்றிக் கொண்டேன்
உம் தோளில் அமர்ந்து விட்டேன் - நான்
உம் தோளில் அமர்ந்து விட்டேன்
உந்தன் சிறகுகள் நிழலினிலே
உலகத்தை மறந்துவிட்டேன்.

# நீங்க மட்டும் இல்லாதிருந்தா

நீங்க மட்டும் இல்லாதிருந்தா - என்
துக்கத்தில் நான் அழிந்திருப்பேன் - உங்க
வார்த்தை மட்டும் தேற்றாதிருந்தா - மன
சஞ்சலத்தில் மரித்திருப்பேன்
இயேசையா உன் அன்பு போதும் - என்
நேசரே உன் கிருபை போதும்

I

தண்ணீரின் மத்தியில் நடந்தபோது
மூழ்காமல் காத்துதுன் கிருபையப்பா
அக்கினியில் நடந்த போது - கடும்
அக்கினியில் நடந்த போது
எனை மீட்டதுன் கிருபையப்பா

II

நிந்தைகள் அவமானம் சூழ்ந்த போது
ஆற்றியே அணைத்தும் கிருபையப்பா
விக்கினங்கள் சூழ்ந்த போது - மரண
விக்கினங்கள் சூழ்ந்த போது
எனை மீட்டதுன் கிருபையப்பா

III

அன்னையின் கருவிலே தெரிந்து கொண்டு
இம்மட்டும் காத்ததும் கிருபையப்பா
வழி தப்பி அலைந்த போது - உந்தன்
வழி தப்பி அலைந்த போது
மீட்டு இரட்சித்ததும் கிருபையப்பா

# இன்பக் கனவொன்று

இன்பக் கனவொன்று நான் கண்டேன்
இறை ஆட்சி மலரக் கண்டேன்
எங்கும் மனங்கள் மகிழக் கண்டேன்

இயேசுவின் அருகினில் ஏழைகள் அமரக் கண்டேன் - இறை
அன்பினில் அகிலமே ஒன்றென உணர்ந்து நின்றறேன்
பிறர்க்கென வாழ்ந்திடும் மனிதர்கள் பலரைக் கண்டேன்
பிறர் நலம் பேணிடும் பணியில் எனை இணைத்தேன்
எந்தன் வாழ்வின் பொருள் அறிந்தேன்

அன்பே அனைவர்க்கும் ஆக்கம் என அறிந்தேன் - அகச்
சுதந்திரமே எங்கும் ஒளியெனக் கண்டு கொண்டேன்
நீதியின் பாதையில் யாவரும் நடக்கக் கண்டேன்
நிதமும் புதுமை வாழ்வில் சேரக் கண்டேன்
அன்பில் நிறைவை நான் கண்டேன்.

# என் இதயம் யாருக்குத் தெரியும்

என் இதயம் யாருக்குத் தெரியும்
என் வேதனை யாருக்குப் புரியும்
என் தனிமை என் சோர்வுகள்
யார் என்னைத் தேற்றக் கூடும் - 2

நெஞ்சின் நோவுகள் - அதை
மிஞ்சும் பாரங்கள்
தஞ்சம் இன்றியே உள்ளம் ஏங்குதே - 2

சிறகு ஒடிந்த நிலையில்
பறவை பறக்குமோ
வீசும் புயலிலே படகும் தப்புமோ - 2

மங்கி எரியும் விளக்கு - பெரும்
காற்றில் அணையுமோ
உடைந்த உள்ளமும் ஒன்று சேருமோ - 2

என் இதயம் யேசுவுக்கு தெரியும் - என்
வேதனை யேசுவுக்குப் புரியும்
என் தனிமை என் சோர்வுகள்
யேசு தேற்றுவார் - 2

# கடல் கடந்து சென்றாலும்

கடல் கடந்து சென்றாலும் - தீ
நடுவே நடந்தாலும் - புயல்
சூழ்ந்து எழுந்திடும் காரிருளை - நீ
கடந்திட நேர்ந்தாலும்
உன்னோடு நான் இருப்பேன் - 2
அஞ்சாதே கலங்காதே...

I

தேவனின் பார்வையில் நீ மதிப்புள்ளவன்
பொன் விளை நிலம் போலே
பூமியில் வாழ்ந்திடும் யாவிலும் உன்நிலை
உயர்ந்தது அவராலே
பால் நினைந்தூட்டிடும் தாய் மறந்தாலும்
நீ அவர் மடி மேலே - மனம்
தேற்றுவார் பலம் ஊட்டுவார்
வாழ்வினில் ஒளி தானே - அஞ்சாதே

II

பாலையில் பாதையும் பாழ் வெளி ஓடையும்
தோன்றிடும் அவர் கையால்
வான் படை ஆண்டவர் வாய் மொழியால் வரும்
மேன்மையை எவர் சொல்வார்
பார்வையிழந்தவர் வாய்திறவாதோர்
யாவரும் நலமடைவார் - இறை
ஆட்சியில் அவர் மாட்சியில்
மானிடம் ஒன்றாகும் - அஞ்சாதே....

# என்னைச் சுமப்பதனால்

என்னைச் சுமப்பதனால் இறைவா உன்
சிறகுகள் முறிவதில்லை
அள்ளி அணைப்பதனால் இறைவா உன்
அன்பு குறைவதில்லை
ஆயிரம் மின்னல் இடித்திட்ட போதும்
வானம் கிழிவதில்லை
ஆயிரம் மைல்கள் நடந்திட்ட போதும்
நதிகள் அழுவதில்லை - 2

I

கருவைச் சுமக்கும் தாய்க்கு என்றும்
குழந்தை சுமையில்லை
கருவிழி சுமக்கும் இருவிழி அதற்கு
இமைகள் சுமையில்லை
மதுவைச் சுமக்கும் மலர்களுக்கென்றும்
பனித்துளி சுமையில்லை
வானைச் சுமக்கும் மேகத்துக்கென்றும்
மழைத்துளி சுமையில்லை

II

அகழும் மனிதரைத் தாங்கும் பூமிக்கு
முட்கள் சுமையில்லை
இகழும் மனிதரில் இரங்கும் மனதுக்கு
சிலுவைகள் சுமையில்லை
உலகின் பாவம் சுமக்கும் தோள்களில்
நான் ஒரு சுமையில்லை
உயிரை ஈயும் உன் சிறகின் நிழலில்
இதயம் சுமையில்லை - 2

# நன்றி நவிலல்

"இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே" எனத் தொனிப்பொருளைக் கொண்ட இம்மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு சித்தம் கொண்ட எல்லாம் வல்ல இறைவனுக்கு எமது மனம் நிறைந்த நன்றிகள்.

இம் மாநாட்டிற்கு ஆசி வழங்கிய மன்னார், யாழ், திருமலை மட்டு நகர் ஆயர்கள், கல்வியியற் கல்லூரி ஆணையாளர், பீடாதிபதி, உபபீடாதிபதிகள், விரிவுரையாளர், இணைப்பாளர், கிறிஸ்தவ மன்றக் காப்பாளர், ஆன்மகுரு, விரிவுரையாளர்கள், ஆகியோருக்கு எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம்மாநாடு நடைபெற ஒன்று சேர்ந்து உழைத்த எமது கல்லூரியின் பீடாதிபதி, உபபீடாதிபதிகள், விரிவுரையாளர் இணைப்பாளர், ஆசிரிய கல்வியியலார்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவ ஆசிரியர்கள், மாநாட்டின் அரங்குகள் இரண்டிற்குமான உரைகளை நிகழ்த்தியோர், நடத்துநர், கலைநிகழ்வுகளை நடத்தியோர், அவற்றை நெறிப்படுத்தியவர்கள், நிதி உதவி வழங்கியோர் வருகை தந்து சிறப்பித்த ஓய்வு பெற்ற அருட்கலாநிதி ஜெபநேசன் ஆண்டகை அவர்கள். மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் மறைமாவட்ட இளைஞர் ஒன்றிய பிரதிநிதிகள், பங்கு இளைஞர் ஒன்றி பிரதிநிதிகள் அனைவருக்கும் எம் நன்றிகள்.

ஒலி, ஒளி அலங்கார சேவைகளை எமக்கு வழங்கியவர்கள், இம்மாநாட்டு மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த மல்ரிவிஷன் அச்சகத்தினர், இம்மாநாட்டை சாத்தியமாக்கிய எமது கிறிஸ்தவ மன்ற ஆன்ம குரு அருட்பணி இயேசுராஜன் அ.ம.தி, பாடற்பயிற்சிகளை வழங்கி சிறப்பித்த அருட்பணி விமல் அ.ம.தி, அத்துடன் இசைக்கருவியை மீட்டி பாடல்களை மெருகூட்டிய வாத்திய கலைஞர்கள், அனைத்து வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த எமது பீடாதிபதி திரு.க.பேர்ணாட், மன்றத்தின் காப்பாளர் திரு.மி.சூசைதானசன் ஆலோசகர்களான திரு.S.பற்றிக் ஜெராட், திருமதி.நெ.அன்ரனி குரூஸ் கிறிஸ்தவ மன்றத்தினர் ஆகியோருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைக் கூறுகின்றோம்.

மாநாட்டு மலர்க்குழு -2011-

| கிறிஸ்தவ மாநாடு ஆண்டு | மகுட வாக்கியம் | அரங்குகள் | தலைப்புக்கள் |
|---|---|---|---|
| 2007 | "செபத்தின் வழியில் இறைவன் மடியில்" | வண பிதா.பி.ஏ.தோமஸ் அரங்கு | வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் செபம் |
| | | வீரமாமுனிவர் அரங்கு<br>அன்னை திரேசா அரங்கு | இன்றைய விடுதலை வாழ்விற்கு இறுதி ஆயுதம் செபமே |
| | | நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அரங்கு | இரக்கத்தின் இறைவனை கவரக்கூடிய செபங்கள் |
| 2008 | "இறைவார்த்தையே நிறைவாழ்வு" | தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் அரங்கு | சகோதரத்துவம் பற்றி மதங்கள் கூறுகின்றன<br>இறைவன் விரும்பும் மனிதன் |
| 2009 | "வாழ்வுக்கு வழிகாட்டும் விசுவாசம்" | தியோகுபிள்ளை ஆண்டகை அரங்கு<br>தாவீது அடிகளார் அரங்கு | வாழ்வின் பிரச்சினைகளுக்கு சமயங்கள் காட்டும் வழி தீர்வாகிறது<br>திருமணம் - திருச்சபை சிவில் சட்ட நோக்கு |
| 2010 | மாணவர் அனுமதிக்கப்படாமையினால் மாநாடு நடத்தப்படவில்லை | | |
| 2011 | இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே" | எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அரங்கு | சமகால இளைஞர்கள் எதிர்நோக்கும் சாவல்களும் தீர்வுகளும் |
| | | அடைக்கலமுத்து அமுது அரங்கு | தற்கால இளைஞர்களின் பங்கு |





உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க:
அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயலைக் கண்டு
உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்

(மத் : 5 : 16)